SLM –08

# "உயர் தொடக்க நிலை ஆசிரியர்களிடையே மொழிப்பாடத்தில் படைப்பாற்றல் திறனைக் கலப்பு உத்திகள் மூலம் மேம்படுத்துதல்"

ஆய்வாளர்

முனைவர் கி.கலைவாணன் எம்.ஏ.எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.எச்டி.,

தமிழ் விரிவுரையாளர்

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும்

பயிற்சி நிறுவனம்

உத்தமசோழபுரம்

சேலம் – 636 010

செயலாராய்ச்சி ஒப்படைப்பு

மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்

பயிற்சி நிறுவனம் – 600 006

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 3 |
| 2 | ஆய்வின் பின்பிலம் | 10 |
| 3 | பிரச்சனையை அடையாளம் காணல் | 10 |
| 4 | ஆய்வின் தேவை | 11 |
| 5 | பிரச்சனையை வரையறுத்தல் | 12 |
| 6 | ஆய்வின் குறிக்கோள் | 13 |
| 7 | பிரச்சனைக்குரிய உத்தேச காரணங்கள் | 14 |
| 8 | கருதுகோள்கள் | 15 |
| 9 | ஆய்வின் முறைகள் | 20 |
| 10 | பகுப்பாய்வு விளக்கமுறை | 21 |
| 11 | ஆய்வின் கண்டுபிப்புகள் | 27 |
| 12 | ஆய்வின் பயன்கள் | 27 |
| 13 | கல்வியில் தாக்கங்கள் | 27 |
| 14 | பரிந்துரைகள் | 27 |
| 15 | முடிவுரை | 28 |

## 1. முன்னுரை:

கல்வி தத்துவத்தின்படி கல்வியானது, சுதந்திரமான கற்றலைத் தருவதாகவும், படைப்பாற்றலுடன் கூடிய தன் திறனை வெளிப்படுத்துவதாகவும், இயற்கையுடன் இயைந்ததாகவும் இருத்தல் வேண்டும். இக்கூற்றின் அடிப்படையிலேயே, கற்றல் கற்பித்தல் முறைகள் அமைக்கப்பட்டு வகுப்பறை நிகழ்வுகள் நடைபெற, படைப்பாற்றல் கல்வி முறை திட்டமிடப்பட்டுள்ளது.

கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் ஆசிரியரிடம் எழுவதைக் காட்டிலும் கற்க வேண்டும் என்ற ஆர்வம் மாணவரிடம் தோன்றுவதே கற்றலுக்கு அடிப்படை – டால்டன் தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு ( NCF), 2000 மற்றும் 2005ன் கூற்றுப்படி, அனைத்து மாணாக்கரும் கற்பதற்கு ஆர்வமுடனும், கற்றல் திறன் உள்ளவராகவும் உள்ளனர். கற்றலின் முக்கிய கூறுகளாக பொருள் உணர்தல், கருதுகோள் அமைத்தல், மீள்பார்வை, கருத்து உருவாக்கம் ஆகியவை அமைந்துள்ளன. அனுபவம் வாயிலாக பொருள்களை உருவாக்குதல் மற்றும் வடிவமைத்தல், பரிசோதனை செய்தல், படித்தல், கலந்துரையாடல், கேட்டல், வினவுதல், சிந்தித்தல், கருத்துக்களை உள்வாங்குதல், எழுதுதல், பேசுதல் ஆகியவற்றின் மூலம் மாணவர்கள் கற்றலை வெளிப்படுத்துகின்றனர்.

வகுப்பறைக்குள்ளும், பள்ளிக்கு வெளியேயும் கற்றல் நிகழ வாய்ப்புள்ளது. கற்றலுக்கான ஆயத்த மனப்பான்மையை மாணாக்கரிடையே ஏற்படுத்தினால்தான் கற்றல் நிகழ வாய்ப்பு ஏற்படும்.

'மாணவர்களை ஆசிரியர் உற்று நோக்கக் கற்றுக் கொண்டால் மாணவர்கள் தம்மைத் தாமே கவனிக்க முற்படுவர்' படைப்பாற்றல் கல்வி முறை தமிழக வகுப்பறையில் ஒரு சிறந்த மாற்றத்தையே உருவாக்கியுள்ளது. படைப்பாற்றல் கல்வி, செயல்நிலைசார் கற்றலை ( Active Learning) வலியுறுத்துகிறது.

செயல்வழிக்கற்றல், ஆசிரியர் மைய கற்பித்தலில் இருந்து மாணவர் மைய கற்றலுக்கு தொடக்கக்கல்விக் களத்தை மாற்றியுள்ளது எனலாம். ஆசிரியர் பாடப் பொருள்களை வகுப்பறையில் கற்பிப்பது என்பதிலிருந்து மாணவர், மிகுந்த செயல்பாடுகள் மூலம், சுறுசுறுப்பாக, கற்றல் கற்பித்தல் பொருள்களுடன், இயங்கி கற்பது மற்றும் மாணவர்களின் படைப்பாற்றல் திறனை மேம்படுத்துதல் என்ற நிலைக்கு இம்முறை மாற்றியுள்ளது.

## 1.1.படைப்பாற்றல் :

உலக உயிர்களுள் மனிதன் தன்சிந்தனை ஆற்றலால் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். சிந்தனை என்பது, மொழியால் வெளிப்படும் செயல். மொழிவழியாகவே மனிதச் சிந்தனை வெளிப்படுத்தப்படுகிறது. சிந்தனை வெளிப்பாட்டில் காலத்தைக் கடந்து நிற்கும் தன்மை எழுத்துப் பதிவுகளுக்கே உண்டு. பெற்ற மொழித்திறனால் மனத்தில் பதிந்த கருத்துகளைத் தக்க இலக்கிய வடிவில் தருவதே படைப்பு எனப்படும். அவை ஒழுங்குபட்ட வடிவத்தில் அழகுணர்ச்சியோடு ஆழ்ந்த சிந்தனை வீச்சாக வெளிப்பட்டிருப்பின் பலரும் விரும்பிக் கற்பர். அதனால், அது விரிந்து மனித குலத்திற்குப் பயன்படும்.

எனவே, படைப்பாற்றல் என்பது சிந்தனையின் உயிரோட்டம், உயர்திறன், காலங் கடந்து நிற்பது, மிகுபயன் அளிப்பது ஆகும்.

## 1.2. காலங்கடந்து நிற்கும் படைப்புகள்:

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னும் பின்னும் தோன்றிய தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், ஐம்பெருங் காப்பியங்கள், ஆழ்வார் அருளிச் செயல்கள், நாயன்மார் பாடல்கள், கம்பராமாயணம் போன்றவை இன்றளவும் விரும்பிப் படிக்கப்பெற்றுப் பயனளிப்பதற்கு அவை படைப்பாற்றல் மிக்கவையாக விளங்கியமையே காரணம் ஆகும்.

## 1.3. படைப்பாற்றல் வெளிப்பாட்டு வடிவங்கள் :

படைப்பாற்றல் என்பது பிறப்பிலேயே அமைவது; இயற்கையானது; ஒருவரிடம் கற்பதால் உருவாக்கப்படுவதன்று எனக் கூறப்பட்டது. அதனால்தான், 'கவிஞன் உருவாவதில்லை; பிறக்கிறான்' எனவும், 'கருவிலே திருவுடையார்' எனவும், தமிழிலும் பிற மொழிகளிலும் சொல்லி வந்துள்ளனர்.

இன்றைய ஆய்வுகள் இதனை மறுக்கின்றன. அனைவரிடமும் படைப்பாற்றல் உள்ளது. அது வெவ்வேறு வழியில் வெவ்வேறு வடிவத்தில் வெளிப்படுகிறது.

மொழியில் பல்வேறு படைப்பிலக்கிய வடிவங்ங்ள் உள்ளன. அவை அனைத்தையும் உரைநடை, செய்யுள் என்னும் இரண்டனுள் அடக்கலாம்.

'உரைநடை' வடிவம் மொழியைக் கற்கும் தொடக்கக் காலத்திலேயே வெளியீட்டுத் திறன்களான 'பேசுதல்', 'எழுதுதல்' ஆகியவற்றில் கையாளப்படுகிறது. சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை, கடிதம் ஆகியவை உரைநடை வடிவத்திலான படைப்பிலக்கியங்கள்.

செய்யுள் வடிவம் தொடக்க வகுப்புகளில் மழலையர் பாடல்களாகவும், பிறகு பாடல் வடிவில் அமையும் இலக்கியங்களாகவும் மாணவர்களுக்குப் புலப்படுத்தப்படுகின்றன. தனிப்பாடல், தொடர்நிலைச் செய்யுள், சிறுகாப்பியம், பெருங்காப்பியம் ஆகியவை செய்யுள் வடிவத்திலான படைப்பிலக்கியங்கள்.

## 1.4. படைப்பாற்றல் உருவாக்கும் உந்துதல் :

எத்தகைய திறனும் கற்பிப்பாலும் பழகுதலாலும் பெறவியலும். கற்பிப்புக் காலத்தில் மாணவர்கள் பெறுகின்ற இலக்கிய ஆர்வம், எக்கருத்தையும் எழிலுணர்ச்சியுடன் நுணுகி நோக்கல், படிப்புப் பழக்கம், படித்ததைப் போல ஒன்றைத் தானும் உருக்கவேண்டும் எனும் பெருமித உணர்வு ஆகிய உந்தல்களை ஆசிரியர் மாணவர்களுக்கு உண்டாக்க வேண்டும்.

ஆசிரியர்களின் இலக்கிய ஆர்வத்தைப் பொருத்தே அவரிடம் கற்கும் மாணவர்களுக்கு இலக்கிய ஆர்வம் அமையும். ஆசிரியர்கள் தம் இலக்கிய நோக்கில் மாணவர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

இலக்கியங்களை அவற்றில் பின்புலத் தகவல், அது வழங்கும் செய்தி, உணர்த்து பொருள், வகைப்பாடு, மொழித்திறன் வளர்க்கும் கூறுகள் ஆகிய நோக்குடன் படிக்க வேண்டும் என்பதை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

இவ்வாறு இலக்கியத்தை மாணவர்கள் நுணுகி நோக்கிக் கற்கும் போது உணர்வு மேலோங்கிப் பாராட்டும் மனப்பாங்கு உண்டாகும். பாடுபொருள், மொழிநடை ஆகியவை அவரிடம் தாக்கத்தை விளைவிக்கும். அத்தாக்கம் இலக்கியங்களைப் படிக்கும் எண்ணத்தைத் தூண்டும். இலக்கியப் படிப்பின்போது காணும் பொருளும் மொழிநடையும் மாணவர்தம் உள்ளத்தில் பதிந்து கொண்டதற்கேற்பப் புதிய படைப்பு வடிவமாக வெளிப்படும். இது 'போலச் செய்தல்' என்னும் பழக்கத்தால் உண்டாவதாகும்.

## 1.5. படைப்புப் பெருமிதம் :

தாம் பலவற்றைக் கற்றுள்ளோம். அதைப் பிறருக்குக் கூறவேண்டும் எனும் பெருமித உணர்வு படைப்பாற்றலுக்கு மிகச் சிறந்த உந்துதல் ஆகும். பெருமித உணர்வின் கூறுகளுள் ஒன்றாகக் 'கொடை' என்பதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இக்கூறு படைப்பாற்றல் முனைப்போடு ஒப்பிட்டு எண்ணத்தக்கதாகும்.

எனவே, மாணவர்களுக்குப் படைப்புப் பெருமித உணர்வு எழும் வகையில் அவர் தம் படைப்புகளைப் பள்ளிப் பொதுவிடங்களில் காட்சிப்படுத்தலாம். மேலும் மன்றங்களில் அரங்கேற்றிப் பாராட்டுரை வழங்கலாம்.

## 1.6. படைப்பாற்றல் கல்வி முறையின் அடிப்படை :

- படைப்பாற்றல் கல்வி முறை வகுப்பறையின் இடத்தை பொருத்ததல்ல. சிறிய வகுப்பறையிலோ, பெரிய வகுப்பறையிலோ இதனை நடத்த இயலும்.
- மாணவர் எண்ணிக்கையைப் பொருத்தது அன்று. 20 முதல் 60 மாணவர் கொண்ட வகுப்பறையிலும் இம்முறையை நடத்த இயலும்.
- பாடப் பொருளைப் பொருத்தது அன்று. இம்முறை எவ்விதமான பாடத் திட்டத்திற்கும், எப்பாடப் பொருளுக்கும் பொருந்தும்.
- ஆசிரியரை முழுமையாக சார்ந்திராமல், ஒரு நல்ல ஊக்கப்படுத்தப்பட்ட வகுப்பறையில் தானாகவே நிகழும்.
- ஆசிரியரின் திறனுக்கேற்ப வகுப்பறையில் நிகழும்.
- வகுப்பறையிலோ, வெளியிலோ, கரும் பலகை இல்லாத இடத்திலோ, மண் தரையிலோ, குறைந்தபட்ச வசதிகள் உள்ள இடத்திலோ செயல்படுத்த முடியும்.

ஆசிரியர்கள், கவனித்தல் மட்டுமின்றி, படித்தல், எழுதுதல், கலந்துரையாடுதல், கவிதை புனைதல், கட்டுரை எழுதுதல், கதைகளை வடிவமைத்தல், மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை (ஓவியம் புனைதல், பாடல் பாடுதல்) வளர்த்தல் மற்றும் பிரச்சனைகளைத் தாமே தீர்த்தல் போன்ற திறன்களை வளர்த்துக் கொள்ள வைப்பது மிகவும் அவசியம் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. படைப்பாற்றல் கல்வி முறையில் இது சாத்தியப்படுகிறது.

## 1.7. படைப்பாற்றலின் முக்கியத்துவம் :

கற்றல் கற்பித்தலில் மொழி ஆசிரியர்கள் முயற்சி முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆசிரியர் மாணாக்கரிடையே புரிதலுடன் கற்றல் நிகழ்கிறது. மாணாக்கர் கற்பதற்குக் கற்றுக் கொள்கின்றனர். மாணாக்கர் தனித் தன்மையுடன் கற்றுக் கொள்ள வாய்ப்பளிப்பதாக வகுப்பறைச் சூழல் அமைந்துள்ளது.

கற்றலை வளப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. வெவ்வேறு கற்றல் பாங்கில் (Learning Style) மாணாக்கர் கற்கின்றனர். வெவ்வேறு வகையான திறன்களை வெளிப்படுத்தும் வாய்ப்பு, கவிதை புனைதல், கட்டுரை எழுதுதல், கதைகளை வடிவமைத்தல், மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை (ஓவியம் புனைதல், பாடல் பாடுதல்) வளர்த்தல் ஆகிய நிலைகளிலும் நடைபெறுகிறது.

## 1.8. படைப்பாற்றலின் நன்மைகள் :

- கற்பித்தல் முயற்சியை மேற்கொள்ளும் திறன் பெறுவர்.
- கற்பித்தலில் இயற்கையான ஆர்வத்தைப் பெறுவர்.
- கற்பித்தலுக்கான வழிமுறைகளை வகுப்பார்கள்.
- கற்பித்தலுக்கான ஆயத்தத்தை ஏற்படுத்திக்கொள்வார்கள்.
- அனுபவங்கள் மூலம் கற்றல் கற்பித்தல் நடைபெறும்.
- பகுத்தறியும் மனப்பான்மை வளர்த்துக் கொள்வார்கள்.
- கருத்துக்களைப் படைப்பாற்றல் மூலம் மாணவர்களிடம் கொண்டு செல்வார்கள்.
- சோதித்து அறியும் திறனை வகுப்பறையில் பயன்படுத்துவார்கள்.
- பிரச்சனைக்கு முடிவு காணும் திறனை மாணவர்களிடம் வளர்ப்பார்கள்.
- ஆசிரியர்கள் மாணவர்களை தானே செய்து பார்த்து புரிந்து கொள்ளும் திறனை மேம்படுத்துவார்கள்.

- கற்றலுக்கான பொருள்களைச் சேகரிக்கும் ஆர்வத்தை வளர்த்துக் கொள்வார்கள்.
- ஆசிரியர்கள் வகுப்பறையில் கற்பனைத் திறனை படைப்பாற்றல் மூலம் வளர்ப்பார்கள்.
- புதிய சூழலை பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் சிறப்பாக எடுத்து செல்லப்படும்.
- கற்பித்தலில் பேரார்வம் கொள்வார்கள்.

## 1.9. கல்வியில் படைப்பாற்றலின் பங்கு :

கல்வி, தற்போது வாழ்க்கையில் மிகவும் முக்கியமான நிகழ்வாகும். இக்கல்வியை கற்பிக்கும் போது பல வகையான உத்திகளைப் பயன்படுத்தி கற்பிக்கின்றார்கள். கற்றல் செயல்பாடுகளின் அடிப்படையிலேயே கற்றல், கற்பித்தல் அமைக்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக கதையின் பாதியை கூறி மீதியை ஆசிரியர்களை கூறவைத்தல், சுயமாக கட்டுரைகள் எழுதும் திறனை மேம்படுத்தி வகுப்பறையில் பயன்படுத்துதல், கவிதைகளை எழுத வைத்தல் போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கியது. கற்ற பாடப்பகுதிகள் மற்றும் கருத்துக்களை, தேவையான சந்தர்ப்பங்களில் திருப்புதல், மீள்பார்வை செய்தல் போன்ற செயல்களை உள்ளடக்கியது.

மேலும் ஆசிரியர்கள் வழக்கமான கற்றல் கற்பித்தல் முறையில் பாடப்பொருளை விளக்கும் போது பாடத்தில் கற்றலில் ஆர்வமின்மை அடைந்து விடுகின்றனர். தவிர பெரும்பாலான ஆசிரியர்கள் பாடப்பொருள்களை எளிமையாகவும், புரிந்துகொள்ளும்படியாகவும் மற்றும் ஆர்வமாகவும் விளக்குவதற்குண்டான கற்பித்தல் பொருட்களைப் பயன்படுத்துவதில் சிரமப்படுகின்றனர். படைப்பாற்றல் திறன்களை வளர்ப்பதன் மூலம் கற்றல் நிகழ்வதால் நிலையான கற்றல் ஏற்பட வாய்ப்புள்ளது. பாடத்தை முழுமையாகக் கற்க வாய்ப்புள்ளது.

## 2. ஆய்வின் பின்பிலம் :

கற்றல் கற்பித்தலில் மொழி ஆசிரியர்கள் படைப்பாற்றலுக்கு போதிய கவனம் செலுத்தவில்லை என்பது பற்றி பார்வையில் கண்டறியபட்டது. வகுப்பறையில் ஆசிரியர்கள் படைப்பாற்றல் கொண்டு சுயமாக கட்டுரைகள் எழுதும் சூழலை உருவாக்கவில்லை என அறியபட்டது.

## 3. பிரச்சனையை அடையாளம் காணல் :

பள்ளி பார்வையின் போது மொழி பாடம் கற்பிக்கின்ற பெரும்பான்மையான ஆசிரியர்கள் மரபு ரீதியிலான முறைகளை (விரிவுரை முறை, குழுக்கற்பித்தல் முறை, விளையாட்டு முறை போன்ற உத்திகள்) பின்பற்றி கற்பித்து வருகின்றனர். துணைக்கருவிகளை பயன்படுத்தி கற்பிப்பதில் குறிப்பிட்ட அளவு முன்னேற்றம் அடைந்துள்ளனர். உரைநடை பாடங்களை கற்பிப்பதற்கு இவை போதுமானவையாக இருக்கலாம். செய்யுளையோ, கதை, கட்டுரைகளையோ கற்பிப்பதற்கு இவை போதுமானவையாக இருப்பதில்லை.

மேலும் படைப்பாற்றல் திறனில் ஒரு சில ஆசிரியர்கள் படைப்பாற்றல் சார்ந்த விசயங்களில் போதிய கவனம் செலுத்தவில்லை என தெரிந்தது. மேலும் ஆசிரியர்கள் படைப்பாற்றலுக்கு போதிய வாய்ப்புகள் தருவது குறைவாக இருந்தது.

எனவே படைப்பாற்றல் வழி கலப்பு உத்திகளை பயன்படுத்தி கற்பிப்பதற்காக இந்த ஆய்வு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த செயலாராய்ச்சியின் முடிவுகள் ஆசிரியர்கள் மாணவர்களிடம் படைப்பாற்றலை வளர்ப்பதற்கு உதவிகரமாக இருக்கும். இதன் மூலம் வகுப்பறையில் மாணவர்கள் கதை, கவிதை, சுயமாக கட்டுரை எழுதவும் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கவும் ஆசிரியர்கள் துணைபுரிவார்கள்.

## 4. ஆய்வின் தேவை :

ஆசிரியர் என்பவர் கற்பிப்பவர் மட்டுமல்ல. மாணவர்களுக்கு வழிகாட்டுபவர். அவர் பல்வகை துறை சார்ந்த திறன்களை பெற்றிருப்பது அவசியமாகும். நடைமுறையில் ஆசிரியர்கள் கற்பித்தலில் மட்டுமே முழுமையாக கவனம் செலுத்துகின்றனர். கற்பித்தலில் படைப்பாற்றலை பயன்படுத்தி கற்பிக்கும் போது மாணவர்கள் முழுமையாக ஆர்வம் மற்றும் கவன ஈர்ப்புடன் ஈடுபடுகின்றனர். படைப்பாற்றல் என்பது புதுமையான ஒன்றை உருவாக்குவது மட்டுமன்று. மாறாக, தாங்கள் செய்கின்ற செயலை திறம்பட புதுமையான முறையில் செய்வதாகும். இதுவும் ஒருவகை படைப்பாற்றலே.

பள்ளிப்பார்வையின் போது ஆசிரியர்கள் மொழி பாடத்தில் கற்றல் கற்பித்தலில் முழுமையான கவனம் செலுத்துகின்றனர் என்பதும், மேலும் படைப்பாற்றல் திறனில் ஒரு சில ஆசிரியர்கள் ஆர்வம் இல்லாமல் இருப்பதும், ஆசிரியர்கள் படைப்பாற்றலுக்கு போதிய வாய்ப்புகள் தருவதும் குறைவாக இருந்தது. மாணவர்களுக்கு புதுி்கைளை புகுத்தி படைப்பாற்றலை கற்பிப்பதற்காக உயர் தொடக்க நிலை ஆசிரியர்களிடையே மொழிபாடத்தில் படைப்பாற்றல் திறனை மேம்படுத்தும் பொருட்டு இந்த தலைப்பை செயலாராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த செயலாராய்ச்சியின் முடிவுகள் ஆசிரியர்கள் தங்களின் வகுப்பறையில் மாணவர்களிடம் படைப்பாற்றலை வளர்ப்பதற்கு உதவிகரமாக இருக்கும்.

## 5. பிரச்சனையை வரையறுத்தல் :

திறன் என்பது அடிப்படைத் திறன்கள், உயர்நிலை திறன்கள் மற்றும் மென் திறன்கள் என்று வகைப்படுத்தப்படும். இங்கு கதை எழுதும் திறன், சுயமாக கட்டுரை எழுதும் திறன், கவிதை எழுதுதல் போன்றவை விளக்கப்படுகிறது.

## கலப்பு உத்தி:

ஆசிரியர் என்பவர் வகுப்பறை கற்பித்தலின் போது ஒரே விதமான உத்தியை பின்பற்றாமல் மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்கான பல்வேறு வகையான உத்திகளை ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். இங்கு படைப்பாற்றலில் கலப்பு உத்திகள் (பல்வேறு உத்திகள்) ஆசிரியர்கள் வகுப்பறையில் பயன்படுத்துவதன் மூலம் ஆசிரியர்கள் வகுப்பறையில் படைப்பாற்றலை மேம்படுத்துவார்கள். கலப்பு உத்தி என்பது ஒரே விதமான உத்திகளை பயன்படுத்தாமல் பல்வேறு விதமான உத்திகளை கையாளுதல் வேண்டும்.

ஆசிரியர்கள் மொழி பாடங்களை கற்பிக்கும் போது பல சிக்கல்களை சந்தித்து வருகின்றனர். ஆசிரியர்களுக்கு ஒரு பாடத்தினை நேரடியாக விளக்குவதற்கும் அதே பாடப்பொருளை மாணவர்களின் படைப்பாற்றல் திறனை மேம்படுத்துவதன் விதமாக கற்பிக்கும் போது ஏற்படும் விளைவுகளை நாம் ஆசிரியர்களுக்கு முழுமையான புரிதலை வழங்க வேண்டும்.

படைப்பாற்றலில் கலப்பு உத்திகள் மூலம் கதை, கவிதை, சுயமாக கட்டுரை எழுதுதல் போன்ற ஆசிரியர்களின் உள்ளார்ந்த படைப்பாற்றல் திறனை மேம்படுத்தும் பொருட்டு இந்த தலைப்பை செயலாராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## 6. ஆய்வின் குறிக்கோள் :

- ஆசிரியர்களுக்கு படைப்பாற்றலின் முக்கியத்துவம் குறித்து விளக்குதல்.
- வகுப்பறையில் படைப்பாற்றலை பயன்படுத்துவதின் தேவையை உணர்த்துதல்.
- நடுநிலைப்பள்ளி மொழி ஆசிரியர்களிடம் கதை, சுய கட்டுரை, கவிதைகளை படைப்பாற்றல் மூலம் வெளிக்கொணர்தல். அதனை வகுப்பறையில் பயன்படுத்துதல்.
- ஆசிரியர்கள் படைப்பாற்றலை வகுப்பறையில் எடுத்துச்செல்லும் முறையை விளக்குதல்.
- நடு நிலைப்பள்ளி ஆசிரியர்களிடம் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்ப்பதற்கான கலப்பு உத்திகளை மேம்படுத்துதல்.
- ஆசிரியர்கள் தங்களது வகுப்பறையில் கற்பித்தல் நேரங்களை படைப்பாற்றல் மூலம் பயனுள்ளதாக ஆக்குதல்.
- ஆசிரியர்கள் தங்களது வகுப்பறையில் மாணவர்கள் சுயமாக கட்டுரை எழுத வைக்கும் உத்திகளை கையாளுதல்.
- கதைகளின் முக்கியத்துவம் உணர்ந்து கதைகளை வாசிக்கும் பழக்கம் ஏற்படுத்துதல். இதன் மூலம் புதிய கதைகளை ஆசிரியர்கள் உருவாக்க முயற்சி மேற்கொண்டு அதை தங்களது வகுப்பறையில் பயன்படுத்துதல்.
- பாதி கதையை கூறி மீதி கதையின் முடிவை கூற வைத்து ஆசிரியர்கள் படைப்பாற்றலை மேம்படுத்தி தனது மாணவர்களுக்கு படைப்பாற்றலை வளர்த்தல்.
- ஆசிரியர்கள் தங்களது வகுப்பறையில் புதுக்கவிதை ஹைக்கூ கவிதைகளை வாசிக்க ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- கவி எழுதுவதற்கான திறனை வளர்த்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- இதற்கான உத்திகளை மொழி ஆசிரியர்களிடம் மேம்படுத்துதல்.

இதன் மூலம் மேற்காணும் குறிக்கோள்களை செயலாராய்ச்சியின் மூலம் நிறைவேற்றுதல்.

## 7. பிரச்சனைக்குரிய உத்தேச காரணங்கள் :

1. ஆசிரியர்கள் வகுப்பறையில் கற்பித்தலில் பாடப்பகுதியினை விளக்கும்போது, மாணவர்களிடையே படைப்பாற்றலை மேம்படுத்தும் திறனை கொண்டுவரமுடியவில்லை.

2. ஆசிரியர்கள் அனைத்து பாடப்பகுதிகளையும் பாடப்புத்தகத்தில் உள்ளவாறே மாணவர்களிடையே கொண்டு முயற்சிக்கின்றனர். மாணவர்கள் படைப்பாற்றலை புரிந்து கொள்வதில் இடர்படுகின்றனர்.

3. பாடப்பொருள் மூலம் ஒரு சில ஆசிரியர்கள் படைப்பாற்றல் திறனை வடிவமைக்கும் போதிய திறன் இல்லாமை.

4. படைப்பாற்றலை வடிவமைத்து தருவதின் முக்கியத்துவம் மற்றும் நோக்கம் பற்றிய சரியான புரிதல் இல்லாதிருத்தல்.

5. உயர்நிலைத்திறன்களை மாணவர்களிடையே வளர்ப்பதில் படைப்பாற்றல் திறன் சார்ந்து போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பள்ளியில் குறைவாக இருக்கும் சூழல்

மேற்கூறிய காரணங்கள் அனைத்தும் உத்தேசக் காரணங்களாகக் கருதி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 8. கருதுகோள்கள் :

1. இச்செயலாராய்ச்சியின் இடையீட்டு நிகழ்விற்கு பின் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறையில் படைப்பாற்றலை வளர்க்கும் திறனை பெறுவர்.
2. பயிற்சி பெற்ற பின் ஆசிரியர்கள் அப்பயிற்சியை தங்களது வகுப்பறையில் பயன்படுத்துதல் மூலமாக வகுப்பறையில் ஆசிரியர்கள் மாணவர்களின் படைப்பாற்றல் திறனில் முன்னேற்றம் காணமுடியும்.
3. ஆசிரியர்கள் படைப்பாற்றல் திறன் வளர்த்தலை வகுப்பறையில் பயன்படுத்தி கற்பிக்கும் போது கவன ஈர்ப்பும் ஆர்வமும் அதிகரிக்கும்.
4. ஆசிரியர்கள் சுயமாக கதை, கட்டுரை, கவிதை எழுதும் திறனை வகுப்பறையில் மாணவர்களிடையே வளப்பார்கள்.

இச்செயலாய்வு மூலம் நடுநிலைப்பள்ளி மொழி ஆசிரியர்கள் படைப்பாற்றல் திறனை பெற்று வகுப்பறையில் படைப்பாற்றல் திறனை மேம்படுத்துவார்கள்.

## 8.1. இடையீட்டு நிகழ்வு :

12 பள்ளிகளைச் சார்ந்த மொழி ஆசிரியர்களுக்கு முன்தேர்வின் அடிப்படையில் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 8.1.1. ஆசிரியரின் திறன் வளர்த்தல் பயிற்சி :

முன்தேர்வின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு கீழ்க்கண்ட கலப்பு உத்திகளின் படி பயிற்சி அளிக்கப்பட்டது.

- ஆசிரியர்களது படைப்பாற்றலை உரைநடை, செய்யுள் ஆகிய இரு வடிவங்களில் வெளிப்படக் கற்றல்–கற்பித்தல் மூலமாகவும், நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தருவதன் மூலமாகவும் வழிகாட்டுதல் மூலமாகவும் ஆசிரியர் உதவமுடியும்; ஆசிரியர்கள் தங்களது வகுப்பறையில் படைப்பபற்றலை வளர்த்தும் ஒருங்கிணைந்த ஆளுமையை உருவாக்குவார்கள்.

### 8.1.1.1 கதைகளை எழுதும் திறன்களை ஆசிரியர்களிடம் கலப்பு உத்திகள் மூலம் வளர்த்தல்:

- கதைகளை அதிகம் வாசிக்கவைப்பதன் மூலம் ஆசிரியர்களின் கற்பனை ஆற்றலை வகுப்பறையில் மாணவர்களிடையே மேம்படுத்துதல்.
- ஒரு கதையின் பாதியை கூறி மீதியைக் கூற வைத்தல்.
- ஆசிரியர்களுக்குத் தெரிந்த கதைகளைக் கூறச் செய்தல்.
- படக் கதையைப் பார்த்து, அதன் நிகழ்வுகளை விவரித்துக் கதையாகக் கூறச் செய்தல்.
- ஆசிரியர்கள் கதை கூறும்போது, கதாபாத்திரமாகவே மாறிப் பாவனையோடு கூறச் செய்தல்.
- ஆசிரியர்கள் தங்கள் சுய அனுபவங்களைக் கதைகளாகக் கூறும் திறனை வளர்க்க வைத்தல்.
- ஆசிரியர்கள் வார்த்தைகளாக கூற அவ்வார்த்தைகளை தொடர்ச்சியாக நீட்டித்து கதை கூறுதல்.
    - உதாரணம். ஒரு ஊரில் ஒரு ராஜா வாழ்ந்தார். .......... அந்த ராஜா காட்டிற்கு சென்றார். ......... அவர் வழிமாறி சென்றுவிட்டார். ........ உடன் வந்தவர்கள் அனைவரும் பிரிந்து சென்றுவிட்டனர். அவர் முன்னே பெரிய ...............

- **தலைப்புத் தருதல்**
    - ஏதேனும் ஒரு தலைப்பை ஆசிரியர்களுக்குக் கொடுத்து, அவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் சிந்திக்கச் செய்து அதன் பிறகு, ஒவ்வொரு குழுவும், அது முடிவு செய்யும் வடிவத்தில், அத்தலைப்புத் தொடர்பாக, ஒரு படைப்பைக் குறிப்பிட்ட காலத்திற்குள், குறிப்பிட்ட பக்கங்களுக்குள் அளிக்க வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது.

- **குறிப்புகள் தருதல்**
  - குறிப்பிட்ட ஒரு சிக்கலைக் குறிப்புகளாக மாற்றி ஆசிரியர்களுக்குத் தரலாம். அவற்றை வெவ்வேறு குழுவினர் படைப்பாக மாற்றி வகுப்பில் வெளியிடச் செய்தல்.
- **முடிவுகூறச் செய்தல்**
  - கதைகளின் முடிவை வெளியிடாமல் பொருத்தமான முடிவுகளைக் குழுவாகச் சிந்தித்து வெளியிடச் செய்தல்.
- **முடிவை மாற்றச் செய்தல்**
  - கதையின் முடிவை விவாதிக்கச் செய்தல்.
  - இருக்கும் பழைய முடிவை மாற்றிவிட்டுப் புதிதாக ஒவ்வொரு குழுவும் ஒரு முடிவை வெளியிடச் செய்தல்.
  - புதிய முடிவுகளுள் சிறந்த ஒன்றை மாணவர்களே தேர்ந்தெடுக்கச் செய்தல்.
  - சிறந்த முடிவாக அமைந்ததற்கான காரணங்களை விளக்கச் செய்தல்.
- **வடிவம் மாற்றுதல்**
  - கதை வடிவில் உள்ளவற்றை நாடகம், கவிதையில் செய்யுள் வழக்கு, புதுக்கவிதை, உரையாடல் போன்றவையாக மாற்றச் செய்தல்.
- **வகை மாற்றுதல்**
  - ஒரே வடிவத்தில் அதன் வகைகளுக்குள் மாற்றம் செய்தல் உதாரணம்– திருவிழா என்னும் தலைப்பில்
  - ஒரு குழு விளக்கக் கட்டுரை எழுதுதல்.
  - மற்றொரு குழு உரையாடலாக எழுதுதல்.

### 8.1.1.2. சுயமாக கட்டுரை எழுதும் திறன்களை ஆசிரியர்கள் வகுப்பறையில் வளர்த்தல்:

- கட்டுரை என்பது உயர்நிலைத்திறன்.
- பெரும்பாலான வகுப்பறையில் எழுதுதல் திறனை வளர்த்தலும் கையெழுத்தை அழகாக இருக்க வேண்டும் என்று மட்டுமே பார்க்கப்படுகிறது.
- ஆசிரியர்கள் வகுப்பறையில் சுயமாக சிந்தித்து அவர்களது சொந்த நடையில் கட்டுரை எழுதவைத்தல்.
- இதில் அழகான கையெழுத்து இங்கு நோக்கமல்ல.
- ஆசிரியர்கள் தங்களது படைப்பாற்றல், கற்பனையாற்றல், கூர்சிந்தனைத்திறன் வளர்த்தல் முக்கியமாக கருதப்படுகிறது.
- வெவ்வேறு தலைப்புகளில் கட்டுரை எழுதவைத்தல்.
- விடுமுறையில் சுற்றுலா சென்று வந்த நிகழ்வுகளை கட்டுரையாக எழுதவைத்தல்.
- ஆசிரியர்களுக்கு பிடித்த தேசியத் தலைவர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் குறித்து கட்டுரையை சொந்த நடையில் எழுதவைத்தல்.

போன்ற செயல்பாடுகளை ஆசிரியர்கள் தங்களது வகுப்பறையில் பயன்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டது.

### 8.1.1.3. சுயமாக கவிதை எழுதும் திறன்களை ஆசிரியர்கள் வகுப்பறையில் வளர்த்தல்:

- ஆசிரியர்கள் தங்களள வகுப்பறையில் புதுக்கவிதை மற்றும் ஹைக்கூ கவிதைகளை புரிந்துகொள்ள வைத்தல்.
- வார்த்தைகளை கொடுத்து ஹைக்கூ கவிதைகளை கூறச்செய்தல்.
- தலைப்புகளை கொடுத்து ஒன்றிரண்டு வார்த்தைகளாக வடிவமைக்க கூறுதல்.

- சொந்த அனுபவங்கள், நிகழ்வுகள், உள்ளூர் கதைகள், வாழ்க்கைக் கதைகள் சார்ந்து கவிதைகள் எழுதவைத்தல்.
- கவிதை நூல்களை அதிகமாக வாசிக்க வைத்தல்

மேலும் ஒரு சில தலைப்புகள் ஆசிரியர்களுக்கு தரப்பட்டு அவர்களை புதுக்கவிதை மற்றும் ஹைக்கூ கவிதை ஆசிரியர்களை எழுத வைக்கப்பட்டது. உதாரணம்.

<table>
<tr><td><u>நட்பு</u><br>கர்ணனை<br>தேடினேன்<br>சகுனிகள் தான்<br>வாய்த்தனர்!</td><td><u>அறிவு</u><br>6ஐ விட<br>5 பெரியது<br>நன்றியில்!</td></tr>
<tr><td colspan="2"><u>கைம்பெண்</u><br>வார்த்தையில் இரண்டு பொட்டு வைத்து<br>அர்த்தம் சொல்லும் சமூகம்<br>உன் வாழ்க்கையில்<br>இரண்டாவது பொட்டுவைக்க<br>தயங்குவது ஏன்?</td></tr>
</table>

இதன் மூலம் ஆசிரியர்கள் படைப்பாற்றல் திறனை கலப்பு உத்திகள் மூலம் மாணவர்களிடம் வளர்த்தல் தொடர்பாக கீழ்க்கண்ட திறன்களை பெற்றனர்.

- வகுப்பறையை சாதாரண சூழ்நிலையிலிருந்து மகிழ்வான சூழலுக்கு மாற்றுதல்.
- ஆசிரியர்கள் மாணவர்களின் கவனத்தினை வகுப்பறையிலேயே தக்கவைத்தல்.
- ஆசிரியர்கள் படைப்பாற்றல் மற்றும் சிந்திக்கும் திறன்களை மாணவர்களிடம் வளர்த்தல்.

## 9. ஆய்வின் முறைகள் :

### a. ஆய்வு மாதிரி :

பள்ளிக்கு ஓர் ஆசிரியர் வீதம் சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியத்தில் நடுநிலைப்பள்ளிகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் பள்ளிக்கு ஓர் ஆசிரியர் வீதம் 12 பள்ளிகளில் மாதிரியாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

### ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பள்ளிகளின் விவரம்.

1. ஊ.ஒ.ந.பள்ளி, ஒதியத்தூர்.
2. ஊ.ஒ.ந.பள்ளி, ஆணையாம்பட்டி.
3. ஊ.ஒ.ந.பள்ளி, 10வது வார்டு, கெங்கவல்லி.
4. ஊ.ஒ.ந.பள்ளி, 74,கிருஷ்ணாபுரம்.
5. ஊ.ஒ.ந.பள்ளி, மூலப்புதூர்.
6. ஊ.ஒ.ந.பள்ளி, தம்மம்பட்டி (மெயின்).
7. ஊ.ஒ.ந.பள்ளி, வாழக்கோம்பை.
8. ஊ.ஒ.ந.பள்ளி, காந்தி நகர்.
9. ஊ.ஒ.ந.பள்ளி, நாகியம்பட்டி.
10. ஊ.ஒ.ந.பள்ளி, தண்ணீர் தொட்டி.
11. ஊ.ஒ.ந.பள்ளி, மூக்காகவுண்டன் புதூர்.
12. புனித மரியன்னை நடுநிலைப்பள்ளி, கோனேரிப்பட்டி.

### b. ஆய்வு வடிவம் :

1. தனிக்குழு பரிசோதனை முறை
2. முன்தேர்வு
3. பயிற்சி அளித்தல்
4. பின்தேர்வு

### c. ஆய்வு கருவிகள் :

1. வினாத்தாள் அடிப்படையில்

## 10. பகுப்பாய்வு விளக்கமுறை :

இந்த செயலாராய்ச்சியின் ஆய்வில் ஆசிரியர்களிடம் இருந்து நேர்காணல் மற்றும் முன்தேர்வின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகள் பகுப்பாய்வுகள் மூலம் வெளி கொணரப்பட்டது. இந்த ஆய்வுகள் சேகரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் ஆய்வாளர் மூலம் ஆய்வு செய்யப்பட்டு முறையாக அவர்களின் பதிலை பயன்படுத்தி அனைத்து ஆசிரியர்களும் அவர்களின் கற்பித்தல் முறையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்களிடம் படைப்பாற்றல் சார்ந்த போதுமான புரிதல் இல்லாத காரணத்தால் ஆசிரியர்கள் முன்தேர்வில் குறைவான புள்ளிகள் பெற்றுள்ளனர்.

கலப்பு உத்திகள் மூலம் இடையீட்டு நிகழ்வின் வழி ஆசிரியர்கள் முன்தேர்வை விட பின்தேர்வில் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

மேலும் ஆசிரியர்கள் படைப்பாற்றல் திறனை மேம்படுத்த கலப்பு உத்திகளை வகுப்பறையில் பயன்படுத்துவதில் ஆர்வம் மிகுந்துள்ளது என்பது பின்தேர்வின் மூலம் அறிய முடிந்தது.

ஆய்வில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களும் படைப்பாற்றல் திறனை கலப்பு உத்திகள் மூலம் வளர்ப்பதில் எந்த அளவிற்கு தாக்கத்தையும், பயன்களையும் ஏற்படுத்தியது என்று பகுப்பாய்வு செய்யப்பட்டனர்.

முன்தேர்வு, பின்தேர்வு மதிப்பெண்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு அதாவது ஒப்பீடு செய்யப்பட்டு முன்னேற்ற விபரம் பெறப்பட்டது. அந்த மதிப்பெண்கள் மூலம் வரைபடம் வரைந்து முன்தேர்வை விட பின்தேர்வில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது அறியப்பட்டது.

## முன்தேர்வு, பின்தேர்வு

## ஆசிரியர்களின் மதிப்பெண் பட்டியல்

| வரிசை எண். | பள்ளியின் பெயர் | ஆசிரியர்களின் பெயர் | முன்தேர்வு மதிப்பெண் | பின்தேர்வு மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1. | ஊ.ஒ.ந.பள்ளி, ஒதியத்தூர் | மு.பாத்திமா | 32 | 64 |
| 2. | ஊ.ஒ.ந.பள்ளி, ஆணையாம்பட்டி | ஐ.சின்னையன் | 24 | 58 |
| 3. | ஊ.ஒ.ந.பள்ளி, 10வது வார்டு, கெங்கவல்லி | வெற்றிச்செல்வி | 35 | 76 |
| 4. | ஊ.ஒ.ந.பள்ளி, 74,கிருஷ்ணாபுரம் | மு.நிர்மலா | 33 | 65 |
| 5. | ஊ.ஒ.ந.பள்ளி, மூலப்புதூர் | கணேசன் | 36 | 74 |
| 6. | ஊ.ஒ.ந.பள்ளி, தம்மம்பட்டி (மெயின்) | அன்பழகன் | 41 | 72 |
| 7. | ஊ.ஒ.ந.பள்ளி, வாழக்கோம்பை | சிற்றரசு | 34 | 79 |
| 8. | ஊ.ஒ.ந.பள்ளி, காந்தி நகர் | ராஜேந்திரன் | 36 | 66 |
| 9. | ஊ.ஒ.ந.பள்ளி, நாகியம்பட்டி | வீ.ராமகிருஷ்ணன் | 38 | 68 |
| 10. | ஊ.ஒ.ந.பள்ளி, தண்ணீர் தொட்டி | இளஞ்சேகரன் | 34 | 64 |
| 11. | ஊ.ஒ.ந.பள்ளி, மூக்காகவுண்டன் புதூர் | தமிழ்மாறன் | 37 | 77 |
| 12. | புனித மரியன்னை நடுநிலைப்பள்ளி, கோனேரிப்பட்டி | பி.இசபெல்லாராணி | 35 | 65 |
| | | | 415 | 828 |

## முன்தேர்வு, பின்தேர்வு

## ஓர் ஒப்பீடு

| வரிசை எண். | மதிப்பெண் இடைவெளி | முன்தேர்வு ஆசிரியர்களின் எண்ணிக்கை | பின்தேர்வு ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 0–10 | 00 | 00 |
| 2. | 11–20 | 00 | 00 |
| 3. | 21–30 | 01 | 00 |
| 4. | 31–40 | 10 | 00 |
| 5. | 41–50 | 01 | 00 |
| 6. | 51–60 | 00 | 01 |
| 7. | 61–70 | 00 | 06 |
| 8. | 71–80 | 00 | 05 |
| 9. | 81–90 | 00 | 00 |
| 10. | 91–100 | 00 | 00 |

முன்தேர்வு சராசரி மதிப்பெண்கள் $= \dfrac{\text{மொத்த மதிப்பெண்கள்}}{\text{மொத்த ஆசிரியர்கள்}}$

$= \dfrac{415}{12} = 34.58$

பின்தேர்வு சராசரி மதிப்பெண்கள் $= \dfrac{\text{மொத்த மதிப்பெண்கள்}}{\text{மொத்த ஆசிரியர்கள்}}$


$= \dfrac{828}{12} = 69$

முன்தேர்வு சராசரி = 34.58 %


பின்தேர்வு சராசரி = 69 %

இதிலிருந்து முன்தேர்வு சராசரி மதிப்பெண்களைக் காட்டிலும் பின்தேர்வில் சராசரி மதிப்பெண்கள் அதிகமாகவே உள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது. இது பல்வேறு செயல்பாடுகள் மற்றும் படைப்பாற்றல் திறனைக் கலப்பு உத்திகள் மூலம் ஆசிரியர்களிடம் வளர்க்கும் திறன் மேம்பட்டுள்ளது என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

ஆசிரியர்களிடையேயான முன், பின் தேர்வு வேறுபாடு



அடைவுத்திறன் – ஓர் ஒப்பீடு



## 11. ஆய்வின் கண்டுபிப்புகள் :

பங்குபெற்ற ஆசிரியர்களின் படைப்பாற்றல் திறனை கலப்பு உத்திகள் மூலம் வடிவமைக்கும் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆசிரியர்கள் தங்களது வகுப்பறையில் கதை, கட்டுரை, கவிதை போன்ற படைப்பாற்றல் திறன்கள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

## 12. ஆய்வின் பயன்கள் :

வகுப்பறையில் கற்பிக்கும் போது மாணவர்களின் கவன ஈர்ப்பும் ஆர்வமும் அதிகரித்துள்ளது. கற்றல் கற்பித்தல் மகிழ்வான சூழலாக அமைந்துள்ளது. இதன் மூலம் ஆசிரியர்களின் படைப்பாற்றல் திறன் மேம்பட்டுள்ளது. அவர்கள் தங்களது வகுப்பறையில் கதை, கட்டுரை, கவிதை போன்ற படைப்பாற்றல் திறன்களை மேம்படுத்தி உள்ளனர்.

## 13. கல்வியில் தாக்கங்கள் :

இந்த செயலாராய்ச்சியின் கண்டுபிடிப்பிலிருந்து, ஆசிரியர்கள் படைப்பாற்றல் திறன்களை வளர்த்து கொள்வது மிக அவசியம் என்று கருதப்படுகின்றது.

அந்த திறன்கள் வகுப்பறையில் மாணவர்களிடையே மாறுபட்ட அனுபவங்களையும் செயல்பாடுகளையும் தருகின்றது.

## 14. பரிந்துரைகள் :

படைப்பாற்றல் திறன் சார்ந்த பயிற்சி அனைத்து ஆசிரியர்களுக்கு கலப்பு உத்திகள் மூலம் வழங்கப்படுதல் வேண்டும். மரபு சார் வழி அல்லாத கற்பித்தல் உத்திகளை ஆசிரியர்கள் பயன்படுத்தும் வகையில் பணிமனை மற்றும் பயிற்சிகள் வழங்குதல் வேண்டும்.

ஆகவே அனைத்து பள்ளிகளிலும் அனைத்து வகுப்புகளிலும் படைப்பாற்றலை மையப்படுத்தித் தரும் பட்சத்தில் மாணவர்களின் கவன ஈர்ப்பும் ஆர்வமும் கற்றலும் அதிகரிக்கும் என்று அறிய முடிகின்றது.

படைப்பாற்றல் மூலம் பாடக்கருத்துகள் முழுமையாக ஆசிரியர்கள் கொண்டுசெல்லும் போது மாணவர்களின் கற்பனையாற்றல், கூர்சிந்தனையாற்றல், படைப்பாற்றல் மேம்படும் என நம்பப்படுகிறது.

## 15.முடிவுரை :

இந்த செயலாராய்ச்சியின் மூலம் படைப்பாற்றல் திறனைக் கலப்பு உத்திகள் மூலம் ஆசிரியர்களிடம் மேம்படுத்தும் திறன்கள் மிகவும் பயனுள்ள தகுதியான ஒரு கல்வி கருவியாக இருக்கும் என்பதை இந்த ஆய்வு தெளிவுபடுத்துகின்றது.

## ஆய்விற்காக துணைநின்ற நூல்கள் :


1. தமிழ்மொழி கற்பித்தல், ஆசிரியர் பட்டயப்பயிற்சி
2. பன்முக நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு – முனைவர் கா.வாசுதேவன்
3. கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்
4. படைப்பாற்றலை வளர்த்தல்

## இணைப்பு :1 ஆய்வு கருவி

## முன்தேர்வு / பின்தேர்வு வினாத்தாள்

10 X 2 = 20

1. பாடக்கருத்துகள் மூலம் படைப்பாற்றல் திறனை மாணவர்களிடம் வளர்க்க முடியுமா?
2. வகுப்பறையில் படைப்பாற்றல் திறனை மேம்படுத்த கையாளும் உத்திகள் பட்டியலிடுக.
3. உயர்நிலை திறன்கள் மூலம் படைப்பாற்றலை வகுப்பறையில் வளர்க்க இயலுமா? சுருக்கமாக விளக்குக.
4. வகுப்பறையில் மாணவர்கள் சுயமாக கட்டுரை எழுதுவதன் முக்கியத்துவத்தை விளக்குக.
5. சமகால கவிஞர்கள் பெயர்களை பட்டியலிடுக.
6. மரபு கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை வகுப்பறையில் பயன்படுத்த கற்றல் கற்பித்தலோடு பயன்படுத்த முடியுமா?
7. ஹைக்கூ கவிதை கவிஞர்களின் பெயர்களை குறிப்பிடுக.
8. மரபு கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை வேறுபாடு காண்க.
9. வகுப்பறையில் கதைகளின் முக்கியத்துவம் குறித்து விளக்குக.
10. கீழ்க்கண்ட தலைப்புகளில் ஹைக்கூ கவிதை எழுதுக.
    1. அம்மா
    2. நட்பு
    3. அறிவு?
    4. தூக்கம்

## இணைப்பு :2 ஆய்வு புகைப்படத்தொகுப்பு

### செயலாய்வு தொடர்பான புகைப்படத்தொகுப்பு

### பள்ளி ஆசிரியர்களுக்கு முன்தேர்வு வைத்த நிகழ்வு



# பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கிய நிகழ்வு









## ஆசிரியர்களுக்கு பின்தேர்வு வைத்த நிகழ்வு






**ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கியதற்கு பின் தங்களது வகுப்பறையில் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்த்த போது**



**ஆசிரியர்கள் வகுப்பறையில் படைப்பாற்றலை மேம்படுத்தி கதை கவிதை கூற வைத்தல்**



## ஆசிரியர்கள் வகுப்பறையில் படைப்பாற்றலை மேம்படுத்தி கதை, கவிதை, கட்டுரை எழுத வைத்தல்



